**வான்கூவர் பெருநகர்**

**செய்தி வெளியீடு**

**மே 30, 2023**

**பெருநகர் கனடா பிளேஸ் இடத்திற்கு "கோமகட்ட மாரு" என்ற இரண்டாவது சாலைப்பெயர் அளிக்கவுள்ளது.**

இன்று, வான்கூவர் பெருநகர் மன்றம் "கனடா பிளேஸ்" என்ற இடத்திற்கு இரண்டாவது, கௌரவ சாலைப் பெயராக "கோமகட்ட மாரு பிளேஸ்" என்ற பெயரை அறிவிக்கிறது. இந்த முடிவு தெற்கு ஆசிய சமூகங்களுக்கு எதிரான வரலாற்றுத் தொடர்புள்ள பாகுபாட்டை நிவர்த்தி செய்ய சமூகங்கள் தெரிவித்து, ஆதரவு அளித்த பின்னர் பெருநகர் எடுத்த முயற்சிகளின் அங்கமாகும்.

இந்தக் கௌரவ பெயரளிப்புக்கான இடம் அதன் வரலாற்றுத் தொடர்பின் காரணமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த இடம் கோமகட்ட மாரு என்ற கப்பல் 1914இல் கரை சேர்ந்த துறைமுக மேடைக்கு மிக அருகில் இருக்கிறது. அந்தக் கப்பல் குரு நானக் ஜஹாஸ் என்றும் அழைக்கப்பட்டது.

அந்தக் கப்பலில் 340 சீக்கியர்கள், 27 முஸ்லிம்கள், மற்றும் 12 இந்துக்கள் பயணித்தனர். அவர்கள் பெரும்பாலும் பிரிட்டிஷ் இந்தியாவின் பஞ்சாப் பகுதியில் இருந்து வந்தவர்கள். அவர்கள் கனடா நாட்டுக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டனர். அதுவே ஒரு முக்கியமான அடிப்படைப் பாகுபாடாக வரலாற்று முக்கியத்துவம் பெற்றது.

"இன்றைய முடிவு நமது பெருநகரின் வரலாற்றுத் தொடர்புடைய தவறான வழிகளை ஒப்புக்கொண்டு அதனைச் சரி செய்ய ஒரு அர்த்தமுள்ள வழியாகும்" என்று மேயர் கென் சிம் கூறினார்.
"கனடா பிளேஸ்க்கு இரண்டாவது பெயராக 'கோமகட்ட மாரு' என்ற பெயரை சூட்டியதன் மூலம், நாம் 1914 நிகழ்வில் பாதிக்கப்பட்டோரை கௌரவித்து கடந்த காலத்தில் இருந்து கற்றுக்கொண்டு எதிர்காலத்தில் எல்லோரையும் இணைத்துக்கொள்ளும் முயற்சிக்கான நமது செயல் திட்டத்தைத் தொடருகிறோம்.

"கலாச்சார நிவர்த்தி ஒரு சிக்கலான மற்றும் தொடர்ந்து செயல் வடிவம் பெற்று வரும் செய்முறை. அதனைப் பெருநகர் தெற்கு ஆசிய சமூகங்களுடன் செயல்படுத்தி வருகிறது. இந்தப் பணி அந்த சமூகங்கள் ஒரே சீரானவை அல்ல என்ற புரிந்து கொள்ளுதலுடன் தொடர வேண்டிய

தேவை உள்ளது. இரண்டாவது சாலைப் பெயர் சூட்டுதல் மற்றும் இந்த அறிவிப்பில் பகிரப்பட்ட பகுதி வரலாற்று நிகழ்வின் அங்கம் ஆகியன வரலாற்றுத்தொடர்புடைய பாகுபாடு காட்டுதலை ஒப்புக்கொண்டு அதற்கு பெருநகரைக் காரணமாக அறிவித்தலுக்கான முதல் படி ஆகும்" என்று சமூக ஆய்வாளர் மற்றும் கதை சொல்பவரான மோனிகா சீமா கூறினார். "இந்த மிகவும் கடினமான பணியில் ஈடுபட்டுள்ள தெற்கு ஆசிய சமூகத்தின் உறுப்பினர்களுக்கு நான் எனது ஆழ்ந்த நன்றியறிதலைத் தெரிவிக்க விரும்புகிறேன். தெற்கு ஆசிய சமூகங்களுடன் பெருநகர் புரியும் பணியின் அங்கமாக வரலாற்றுத் தொடர்புடைய பாகுபாடு காட்டியது மற்றும் சொல்லப்படாத நிகழ்வுகளைக் கருத்தில் கொள்வதைத் தொடர நாம் முன்னோக்குகிறோம்."

பெருநகர் மன்றம் தெற்கு ஆசிய சமூகங்களுக்கு முக்கியமான கிட்ஸிலானோவில் உள்ள இரண்டாம் அவென்யூ குருத்துவாராவின் கலாச்சார மற்றும் வரலாற்று முக்கியத்துவத்தைக் கருத்தில் கொள்ளவும் விரும்புகிறது. கோமகட்ட மாரு நிகழ்வின் தொடர்பாக இந்த இடம் வரலாற்று முக்கியத்துவம் பெற்றது. ஏனெனில் அங்குதான் கப்பல் பயணிகளுக்கு ஆதரவாக தெற்கு ஆசிய சமூகம் திரண்டது. எதிர்கால செயல் திட்டங்கள் வான்கூவரில் உள்ள தெற்கு ஆசிய கனேடிய சமூகங்களுக்கு உரித்தான வரலாற்று மற்றும் கலாச்சார முக்கியத்துவத்தின் பிற பகுதிகளையும் மேற்கொண்டு ஆராய உள்ளன.

இந்த பரிந்துரைகள் அங்கீகரிக்கப்பட்ட பின், பெருநகர் ஒரு சமூக செயல்முறை மூலம் "கோமகட்ட மாரு பிளேஸ்" என்ற குறியீட்டின் வடிவமைப்பு மற்றும் பொது மக்களுக்கான கல்வி ஏடுகளை உருவாக்குதல் ஆகியவற்றை ஆரம்பிக்கும். "ஹார்பர் பார்க்கில்" உள்ள நினைவுச்சின்னத்தை மேம்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். 2023 ஆம் ஆண்டு பிற்பகுதியில் ஒரு திறப்பு விழா ஏற்பாடு செய்யப்பட உள்ளது.

பெருநகர் தெற்கு ஆசிய சமூக உறுப்பினர்கள், வியாபாரங்கள், நிறுவனங்கள், மஸ்க்யூயம், ஸ்கொமிஷ், ஸ்லேயில்-வாயுடூத் ஆகியோருடன் இணைந்து வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தெற்கு ஆசிய சமூகங்களின் மீது காட்டப்பட்ட பாகுபாட்டினை நிவர்த்தி செய்யும் பரவலான பணி முன்னேறும்படி செயலாற்றும்.

"கோமகட்ட மாரு பிளேஸ்" என்ற இரண்டாவது சாலை மறு பெயர் சூட்டுதல் பற்றிய முழு அறிக்கைக்கு, கீழ்கண்ட வலை தல இணைப்பைப் பின்பற்றவும்.

**பின்னணி**

ஆயிரத்து தொள்ளாயிரத்துப் பதினான்காம் ஆண்டு மே மாதம் 23-ஆம் நாளன்று குரு நானக் ஜஹாஸ் (கோமகட்ட மாரு) என்று அழைக்கப்பட்ட கப்பல் வான்கூவர் புர்ரார்ட் துறைமுகத்தில் கரைசேர்ந்தது. அதில் ஒரு நல்ல எதிர்காலத்தைத் தேடிக்கொண்டு, பஞ்சாப், பிரிட்டிஷ் இந்தியா ஆகிய இடங்களில் இருந்து வந்த 376 பயணிகள் இருந்தனர். முறையான பயண தஸ்தாவேஜுகள் கொண்டிருந்தும், பாகுபாடு நிறைந்த பெரிய, இருநூறு டாலர்கள் மதிப்புள்ள தலை வரியை செலுத்தியும் கூட சீக்கியர்கள், முஸ்லிம்கள் மற்றும் இந்துக்கள் கொண்ட அந்தப் பயணிகள் கனடா நாட்டுக்குள் அனுமதிக்கப்படவில்லை.

பயணிகள் யாவரும் அசுத்தமான சுகாதாரமில்லாத சூழ்நிலைகளில் இரண்டு கஷ்டமான மாத காலம் கப்பலிலேயே அடைபட்டுக் கிடந்தனர். பல நாட்கள் அவர்களுக்கு உணவும் நீரும் கிட்டவில்லை. உதவி வேண்டி அவர்கள் அரசாங்கத்தை அணுகியும், வான்கூவர் நகர் முதல்வருக்குக் கடிதங்கள் எழுதியும் உள்ளூர் அதிகாரிகள் அவர்களது கோரிக்கையை புறக்கணித்துவிட்டனர். தெற்கு ஆசிய சமூகங்கள், பயணிகள் தாங்கள் பெற்ற வெளியேற்ற உத்தரவுகளை சட்ட ரீதியாகப் போராடவும், அவர்களது உணவு, நீர், மருந்துகள் ஆகிய பொருட்களை அளிக்க முயற்சி செய்யவும் நிதிகளைத் திரட்டினர். மேலும் உள்ளூர் பழங்குடி மக்களும் பயணிகளுக்குப் பொருட்களை அளிக்க முயற்சிகள் செய்தனர் என்பது குறித்தும், அவர்கள் அவ்வாறு செய்ய கப்பலுக்குள் அவர்கள் நுழைய இயலாதவாறு அரசாங்கம் செய்ததால் அந்த முயற்சியில் தோல்வியுற்றனர் என்பது குறித்தும் செய்திக்குறிப்புகள் உள்ளன.

குர்டிட் சிங் என்ற பயணியும், ஜோசப் எட்வர்ட் பேர்ட் என்ற வழக்கறிஞரும் பயணிகள் வெளியேற்ற உத்தரவை ரத்து செய்ய சட்ட ரீதியான முயற்சிகள் எடுத்தபோது தெற்கு ஆசிய சமூகம் அதற்கு ஆதரவு தெரிவித்தும் அதில் தோல்வியே கிட்டியது. அந்தக் கப்பல் கனடிய இராணுவத்தால் கனடிய கடல் நீர்ப்பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்டு, இந்தியாவுக்கே திருப்பி அனுப்பப்பட்டது. அதில் வந்த பயணிகளை இராணுவம் அரசியல் சீர்குலைப்பாளர்கள் என்று வர்ணித்தது. அதன் பின்னர் ஏற்பட்ட ஒரு சோகமான பின்விளைவில் பிரிட்டிஷ் இந்திய துருப்புக்கள் 19 பயணிகளைக் கொன்றுவிட்டனர். இன்னும் பலர் காயப்படுத்தப்பட்டனர். மேலும் அதிகப்பேர் சிறையிலும் அடைக்கப்பட்டனர்.

2021ஆம் ஆண்டு, இந்த வரலாற்று நிகழ்வுக்காக வான்கூவர் பெருநகர் மன்றம் ஒரு அதிகார பூர்வமான மன்னிப்புக் கோரலை வெளியிட்டது. அது தனது கடந்த கால தவறுகளை நிவர்த்தி செய்து, தெற்கு ஆசிய சமூகம் சந்தித்த இனபேத வெறியை எதிர்க்க தனது தொடர்ந்த ஒப்புறுதியை அளித்து வருகிறது.

கோமகட்ட மாரு நிகழ்வினைக் குறித்த மேற்கொண்டும் அதிக செய்தியை அறிய இந்த இணையத்தளத்தைப் பார்க்கவும்.